## May 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தேர்வுக்கு முன்னரே வினாத்தாள் வெளியானதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து, நிகழாண்டு மே 3-ஆம் தேதி 22 லட்சம் பேர் எழுதிய இளநிலை மருத்துவப் படிப்புக்கான தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வை (யுஜி- நீட்) தேசிய தேர்வு முகமை (என்டிஏ) ரத்து செய்தது.

(i) மேலும், இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தும் பொறுப்பை சிபிஐயிடம் ஒப்படைக்க மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகவும், மறுதேர்வுக்கான தேதியை விரைவில் அறிவிக்கவுள்ளதாகவும் என்டிஏ தெரிவித்தது.

2. ஆப்பிரிக்க நாடுகளுடனான உறவில் இனி உதவி என் பதற்கு இடமில்லை. பரஸ்பர மரியாதையுடன் கூடிய முதலீடுகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்' என பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் தெரிவித்தார்.

(i) கென்யாவுடன் இணைந்து அந்நாட்டின் தலைநகர் நைரோபியில் பிரான்ஸ் நடத்தி வரும் 'ஆப்பிரிக்கா ஃபார்வர்டு உச்சிமாநாட்டில் பங்கேற்ற பல ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்களிடையே இமானுவல் மேக்ரான் உரையாற்றினார்.

(ii) அப்போது, ஆப்பிரிக்காவின் எரிசக்தி, ஏ.ஐ., விவசாயத் துறைகளில் 2,300 கோடி யூரோ மதிப்பிலான புதிய முதலீடுகளை அறிவித்தார். இதில் 1,400 கோடி யூரோவை பிரான்ஸ் நிறுவனங்களும், 900 கோடி யூரோவை ஆப்பிரிக்க அமைப்புகளும் வழங்கவுள்ளன.

(iii) 'ஐரோப்பிய-ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையிலான நிதி உறவில் இந்த மாநாடு ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும்' என்றும் இமானுவல் மேக்ரான் நம்பிக்கை தெரிவித்தார்.

3. நிகழாண்டுக்கான தேசிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.

(i) சர்வதேச செவிலியர் தினத்தை யொட்டி, குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறந்த சேவையாற்றிய செவிலியர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

(ii) செவிலியர் பணியில் சிறப்பாக செயல்படுவோருக்கு தேசிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் வழங்கப்படுகின்றன. மத்திய சுகாதாரத் துறையால் நிறுவப்பட்ட இந்த விருதை பெறுவோருக்கு பாராட்டுச் சான்றிதழ், ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது. நிகழாண்டு இந்த விருது உத்தரகண்ட், மேற்கு வங்கம், புதுதில்லி, கோவா, கர்நாடகம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மிஸோரம், சிக்கிம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 15 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(iii) சிறந்த செவிலியருக்கான தேசிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னை மருத்துவக் கல்லூரி நர்சிங் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் டாக்டர் ஆர். சங்கர் சண்முகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. செவிலியர் கல்வி மற்றும் அது சார்ந்த தொழில்முறை மேம்பாட்டுப் பணிகளில் அவரது 26 ஆண்டுகால சிறந்த சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

4. நாட்டில் உள்ள நீதிமன்றங்களை நவீனமயமாக்குவது தொடர்பான வரைவு விதிகளை தயாரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார் தலைமையிலான உயர் நிலைக் குழுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் அமைத்தார். இதுகுறித்து உச்சநீதிமன்றம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- நாடு முழுவதும் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் உள்கட்டமைப்புத் தேவைகள் மற்றும் பற்றாக்குறைகளை கண்டறிந்து அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க நீதிபதி அரவிந்த் குமார் தலைமையிலான உயர் நிலைக் குழு அமைக்கப்படுகிறது.
- குழு உறுப்பினர்களாக கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி தேபாங்சு பசாக், பஞ்சாப் - ஹரியாணா உயர்நீதிமன்ற நீதிபதி அஸ்வனி குமார் மிஸ்ரா, மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி சோமசேகர் சுந்தரேசன் ஆகியோரை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் நியமித்தார்.
- மத்திய பொதுப் பணித் துறை மற்றும் உச்சநீதிமன்ற செயலர் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.
- குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றங்களின் உள்கட்டமைப்புத் தேவைக்கேற்ப மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளிடம் நிதி கோரப்படும்.
- நீதிமன்றங்களில் நவீன காலத்துகேற்றவாறு தொழில்நுட்ப கட்டமைப்புகளை மேம்படுத்தி எண்ம இடைவேளையை குறைக்கவும் இக்குழு பரிந்துரை வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

5. அஸ்ஸாம் முதல்வராக தொடர்ந்து இரண்டாவது முறையாக ஹிமந்த விஸ்வ சர்மா செவ்வாய்க்கிழமை பதவியேற்றார். அவருடன் ஒரு பெண் அமைச்சர் உள்பட 4 அமைச்சர்களும் பதவியேற்றனர். அஸ்ஸாமில் தொடர்ந்து மூன் றாவது முறையாக பாஜக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது.

6. தமிழக காவல் துறையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள போதைப்பொருள் தடுப்புப்படைக்கு போதைப் பொருள் விற்போரின் சொத்துகளை முடக்கவும் பறிமுதல் செய்யவும் அதிகாரம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

(i) முதல்வரும், தவெசு தலைவருமான விஜய், தேர்தல் பிரசாரத்தின்போது மாநிலத்தில் போதைப் பொருளை ஒழிக்க போதைப் பொருள் தடுப்புப் படை உருவாக்கப்படும் என பிரசாரம் செய்தார். முதல்வராக விஜய், கடந்த 10-ஆம் தேதி பொறுப்பேற்றபோது, போதைப்பொருள் தடுப்புப் படை உருவாக்கும் ஆணை உள்ளிட்ட 3 கோப்புகளில் கையொப்பமிட்டார்.

(ii) முதல்வரின் இந்த உத்தரவை செயல்படுத்தும் விதமாக, போதைப் பொருள் தடுப்புப் படையை உருவாக்குவதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டது. அந்தப் படை முதல்வரின் நேரடி கண்காணிப்பில் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் போதைப் பொருள்கள் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடித்து, கடுமையான நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட காவல் துறைகளிலும், அனைத்து மாநகர காவல் துறைகளிலும் போதைப் பொருள் தடுப்புப் படை உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) அதன்படி போதைப் பொருள் தடுப்புப் படைக்காக மாநிலம் முழுவதும் 65 காவல் நிலையங்கள் உருவாக்கப் படுகின்றன. அதில் அதிகபட்சமாக சென்னை பெருநகர காவல்துறையில் 12 காவல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அதேவேளையில் சென்னையைத் தவிர்த்து 37 மாவட்டங்களில் 37 போதைப் பொருள் தடுப்புப் படை காவல் நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன. மொத்தமாக உருவாக்கப்படும் 65 காவல் நிலைங்களுக்கு 520 அதிகாரிகள், காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதில் ஒரு காவல் நிலையத்துக்கு ஒரு ஆய்வாளர் என்ற விகிதத்தில் 65 ஆய்வாளர்களும், 2 பேர் என்ற விகிதத்தில் 130 உதவி ஆய்வாளர்களும், 5 பேர் என்ற விகிதத்தில் 325 போலீஸாரும் தமிழக காவல் துறையின் பிறப் பிரிவுகளில் இருந்து இந்தப் பிரிவுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு, நியமிக்கப்படுகின்றனர்.

(iv) சொத்துகள் பறிமுதல்: போதைப் பொருள் நடமாட்டம் குறித்த உளவுத் தகவல்களைச் சேகரிப்பது, இணையதளம் மூலம் கண்காணிப்பது, வழக்குகளைப் பதிவு செய்வது, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோர், அவர்களது உறவினர்களின் அசையும், அசையா சொத்துகள் பறிமுதல் செய்வது அல்லது முடக்கும் நடவடிக்கை எடுப்பது, நீதிமன்றம் மூலம் தண்டை பெற்றுக் கொடுப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(v) ஏற்கெனவே மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு,போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் நிலையில், போதைப் பொருள் தடுப்புப் படை அந்த இரு பிரிவுகளில் இருந்தும் தனித்துவமாக செயல்படும் என்று தமிழக காவல் துறை உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

7. தமிழக சட்டப் பேரவையின் புதிய தலைவராக ஜே.சி.டி.பிரபாகர் போட்டியின்றி தேர்வாகியுள்ளார். அதேபோல, துணைத் தலைவராக எம்.ரவிசங்கரும் போட்டியின்றி தேர்வாகியுள்ளார்.

8. வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள 717 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை இரண்டு வாரத்துக்குள் மூடுவதற்கு முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

(i) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் தற்போது 4,765 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள்,பேருந்துநிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள கடைகளை ஆய்வு செய்து கண்டறியுமாறு முதல்வர் விஜய் உத்தரவிட்டார்.

(ii) அதன்படி, 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டது. பொதுமக்கள் நலனைக் கருத்தில்கொண்டு வழிபாட்டுத் தலங்கள் அருகிலுள்ள 276 கடைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகிலுள்ள 186 கடைகள் அருகிலுள்ள 255 கடைகள் என மொத்தம் 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அடுத்த இரண்டு வாரத்துக்குள் மூடுவதற்கு முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) முந்தைய திமுக ஆட்சியில் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் அருகே செயல்பட்டு வந்த 500 மதுக்கடைகள் மூடப்பட்டன. 2023-2024 -ஆம் ஆண்டில் ரூ.45,855 கோடியும், 2024-2025-இல் 48,344 கோடியும் டாஸ்மாக்

மதுக்கடைகள் மூலம் தமிழக அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது